செயற்பொறியாளர்,பொ.ப.து/நீ.ஆ.து., கனிமம் மற்றும் கண்காணிப்புக் கோட்டம், மதுரை அவர்களின் செயல்முறைகள்

<u>பிறப்பிப்பவர்:-</u> பொறி .கே.பிரான், பி.இ.,
செயற்பொறியாளர், பொ.ப.து,நீஆது.,

<u>செயல்முறை ஆணை எண்.இ2 /04 / 2020 /ந.ப.3(வ)/ நாள்: 13.02.2020</u>

பொருள்: பணியமைப்பு - பொ.ப.து நியமனம் (நேரடி) தமிழ்நாடு அமைச்சுப்பணித் தொகுதி- தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018-ம் ஆண்டுகளுக்கான ஒருங்கிணைந்த குடிமைப் பணிக்களுக்கான தேர்வு தொகுதி 4-ல் அடங்கிய இளநிலை உதவியாளர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டு இக்கோட்ட கட்டுப்பாட்டின்கீழ் உள்ள உபகோட்டம், விருதுநகர் அலுவலகத்தில் பணிபுரியும் திரு.மு.வினோத்குமார் (பிறந்த தேதி 13.11.1992) இளநிலை உதவியாளராக பணியேற்ற நாள் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - சார்பு.

பார்வை:
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை -3, அவர்களின் கடித எண்.1150/PSD-H2/2019 நாள்:18.02.2019.
2. முதன்மை தலைமை பொறியாளர் நீஆது., மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) பொ.ப.து, சேப்பாக்கம், சென்னை-5 அவர்கள் செயல்முறை ஆணை எண். எஸ்.3 (3)/ 25366/ 2019/ நாள்:25.02.2019.
3. தலைமைப்பொறியாளர் பொ.ப.து, நீஆது, மதுரை மண்டலம் மதுரை, அவர்களின் செயல்முறை கடித எண்.அ1/2405/2019(3)/நாள்:07.03.2019.
4. கண்காணிப்புப்பொறியாளர், நீஆது,பொ.ப.து, பெரியாறு வைகை வடிநில வட்டம், மதுரை அவர்களின் செயல்முறை ஆணை எண். இ2/ 811 (1) / 2019/ நாள்:08.03.2019.
5. செயற்பொறியாளர், பொ.ப.து/நீஆது, கனிமம் மற்றும் கண்காணிப்புக்கோட்டம், மதுரை அவர்களின் செயல்முறை ஆணை எண். இ2/ 04 (334) / 2019/ நாள்:01.04.2019.

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பெற்ற போட்டி தேர்வு 2015-2016,2016-2017 மற்றும் 2017-2018-ம் ஆண்டு தொகுதி 4-ல் தேர்ச்சி பெற்று பொதுப்பணித்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு முதன்மை தலைமைப்பொறியாளர் நீஆது, மற்றும் தலைமைப்பொறியாளர் (பொது) பொ.ப.து, சேப்பாக்கம் சென்னை அவர்களின் செயல்முறை வாயிலாக இக்கோட்ட கட்டுப்பாட்டின்கீழ் உள்ள கனிமம் மற்றும் கண்காணிப்பு உபகோட்டம், விருதுநகருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திரு.மு.வினோத்குமார், இளநிலை உதவியாளர் (வரிசை எண் 3), (தேர்வாணைய வரிசை எண் 13) (பிறந்த தேதி 13.11.1992) பணியேற்ற நாளான 03.04.2019 முற்பகல் முதல் விருதுநகர் உபகோட்டத்தில் இளநிலை உதவியாளராக பணியேற்றுள்ளார். தனியர் பணியேற்ற நாளான 03.04.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணியேற்பு செய்து தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

த.பி.பா

இவர் மீது இதுநாள் வரை எவ்விதமான குற்றச்சாட்டுகளோ, ஒழுங்கு நடவடிக்கைகளோ மேற்கொள்ளப் படவில்லை என்றும், மேலும் தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 விதி எண்7(5)-ன்படி பார்வை எண்.2 இல் காணும் முதன்மை தலைமைப் பொறியாளர் அவர்களின் கடிதத்தில் பத்தி 5-ல் குறிப்பிட்டுள்ளபடி இளநிலை உதவியாளர் பணி நியமனம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் நடுவர் ஆயத்தில் நிலுவையாக உள்ள வழக்குகளில் வழங்கப்படவுள்ள தீர்ப்பிற்கு உட்பட்டது என்ற நிபந்தனையின்படியும் இவருக்கு 03.04.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது. இவருக்குரிய தகுதிகாண் பருவம் இளநிலை உதவியாளர் பதவியில் 03.04.2019 முற்பகல் முதல் துவங்கிடவும் ஆணை வழங்கப்படுகிறது. இவர் தனது தகுதிகாண் பருவத்தினை இளநிலை உதவியாளர் பதவியில் மூன்றாண்டு தொடர்பணியில் இரண்டு ஆண்டு காலத்தினை திருப்திகரமாக நிறைவு செய்திடல் வேண்டும்.

13/02/20

செயற்பொறியாளர்,பொபது.,நீஆது.,
கனிமம் மற்றும் கண்காணிப்பு கோட்டம்,
மதுரை.

13/2/20

பெறுநர்:
திரு.மு.வினோத்குமார்,
இளநிலை உதவியாளர்.
கனிமம் மற்றும் கண்காணிப்பு உபகோட்டம்,
விருதுநகர்.
வழி: உதவி செயற்பொறியாளர், பொபது/நீஆது., கனிமம் மற்றும் கண்காணிப்பு உபகோட்டம்,
விருதுநகர்.